Schemes under the First Five-Year Plan for the Tanjore district

*51 *Q*.—SRI C. MUTHIAH : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிற்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட வேலைகள் யாவை ?

(ஆ) அவைகளில் எவையேனும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனவா ?

(இ) அப்படியானால், அவை யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The First Five-Year Plan was drawn up taking into consideration the interests of the State as a whole. It included individual schemes which benefited particular areas as also schemes of a general nature which benefited individual districts also. The schemes which benefited the Tanjore district in particular are—

(1) The Cauvery Delta Drainage Scheme.

(2) Bridge across the Coleroon at Anaikaranchatram.

(3) Urban Water-supply and Drainage Scheme—

(*a*) Kumbakonam Water-supply Scheme.

(*b*) Mannargudi Water-supply Scheme.

(*c*) Mayuram Water-supply Scheme.

(*d*) Kumbakonam Drainage Scheme.

(*e*) Nagapattinam Drainage Scheme.

The schemes of general nature which also benefited the Tanjore district are many, e.g., various agricultural schemes such as supply of improved seeds and ammonium sulphate, sinking of filter point tube wells and repairs to minor irrigation sources, opening of adult literacy schools and primary and basic schools, improvements to State highways and district roads, etc. It is not practicable to compile a complete list of such schemes benefiting the district alone.

(*b*) & (*c*) The Urban Water-supply and Drainage Schemes referred to in the answer to clause (*a*) have been carried over to the Second Five-Year Plan. Besides, Tanjore district has 20 National Extension Service Blocks working now, which represents 59 per cent of the area covered by National Extension Service. These blocks cover rural development in all its facets.

SRI C. MUTHIAH : முதல் ஐந்தாண்டுத் திட்டப் புஸ்தகத்தில், தஞ்சை ஜில்லாவில் எங்கெங்கு ரோடுகள் போடவேண்டும், எங்கெங்கு சிறு கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவைகளெல்லாம் ஆரம்பிக்கப்படாமலேயே இருக்கின்றன. அதுபற்றி பல முறை தெரிவித்தும் ஆரம்பிக்கப்படவில்லை.

6th February 1959]

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கிறோம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கிறோம் என்று பதில் வருகிறது. இதை கவனித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : சில திட்டங்களை ஆரம்பிக்கவேண்டுமென்று நினைத்தாலுங்கூட, பரிசீலனை செய்தபிற்பாடு அதை ஆரம்பிப்பதற்குப் போதிய சௌகரியங்கள் இல்லாத காரணத்தாலோ அல்லது அந்தத் திட்டம் சரிப்படாது என்று நினைத்தாலோ, விட்டுவிட வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்ன திட்டங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நிர்ணயித்தோமோ அதற்கு மேலேயே பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். இன்னும் புதிய திட்டங்களைச் சேர்ப்பது முடியாத காரியம்.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 60 லட்சம் ரூபாய் செலவில் கனத்த அட்டைகள் செய்யக்கூடிய திட்டம் ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. வாழை, வைக்கோல், ஜலம் முதலிய அட்டைகள் செய்வதற்கான பொருள்கள் ஆடுதுறையில் அதிகமாக கிடைக்குமாகையால், இந்தத் திட்டத்தை ஆடுதுறையில் ஆரம்பிக்க அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதைப் பற்றித் தனிக் கேள்வி ஒன்று தொழில் இலாகா அமைச்சர் அவர்களுக்குப் போட்டால் பதில் சொல்லுவார்.

Man-power

* 52 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps the Government intend to take to utilize the man-power in the State?

The Hon Sri C. SUBRAMANIAM : The Government intend to take the following steps—

(*a*) to assess the long-term requirements of man-power especially skilled man-power, both in the public and private sectors;

(*b*) to make a review of the demand for and supply of skilled man-power and to consider the steps to be taken to bridge the gap between the two; and

(*c*) on the basis of the above review, to re-examine and, if necessary, modify the training programmes, so as to ensure the supply of the required man-power at the proper time.

A number of studies and surveys have been initiated in this direction.

I would like to add that the question was not quite clear and we were wondering whether it related to the utilisation of unemployed man-power or the assessment of man-power requirements and finally we came to the conclusion that the question referred to the man-power requirements. It is on that basis I have given the answer.

Sri S. B. ADITYAN : May I know, Sir, whether the Government realise that the man-power is the wealth of the country and stop the birth control propaganda aimed at reducing the man-power?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, man-power no doubt is the wealth of the country. But unused man-power is a drag on the wealth of the country.